ஓர் உதவி ஆணையர் அலுவலகம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அமைத்துத் தர முன்வந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**40—**

## பகுதிநேர கால்நடைக் கிளை நிலையம்

***7356—திரு. சு. பவுன்ராஜ்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், எடுத்துக்கட்டி ஊராட்சியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செம்பனார்கோவில் ஒன்றியம், எடுத்துக்கட்டி ஊராட்சிப் பகுதியில் பகுதிநேர கால்நடைக் கிளை மருத்துவமனையை அமைத்துத் தருமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். அரசு விதிகளின்படி அங்கே கால்நடைகளின் எண்ணிக்கை போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தினால், எடுத்துக்கட்டி ஊராட்சிக்கு அருகில் உள்ள திருகாளச்சேரி ஊராட்சியையும் இணைத்து அங்கே ஓர் பகுதிநேர கால்நடைக் கிளை மருத்துவமனை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப்பெற்று அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

2014 பிப்ரவரி 3]

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் தந்து மக்களைப் பாதுகாப்பதுபோல், கால்நடைகளுக்கும் பல்நோக்கு மருத்துவமனையைத் தந்து, ஸ்கேன் வசதி, எக்ஸ்-ரே வசதி உட்பட, அதிநவீன வசதிகளைக்கொடுத்து, கால்நடைகளைப் பாதுகாக்கும் திட்டம் தந்தவர் மாண்புமிகு அம்மா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மனிதர்களுக்கு மட்டும் வாழ்வு தந்தவரல்ல. வாயில்லா ஜீவன்களையும் வாழ வைத்தவர் எங்களது தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். எனது தொகுதியில், பகுதிநேர கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**41—**

**பட்டா**

***21352—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சி, வடக்குத் தொகுதி, 5—வது வார்டிலுள்ள குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டா வழங்கக்கோரும் இடம் மதுரை வடக்கு வட்டம், சாத்தமங்கலம் உள்வட்டம், பீ.பீ.குளம், டவுன் சர்வே எண் 1, வார்டு 5, பிளாக் 6, பரப்பு 9 எக்டேர் 4,899 சதுர மீட்டர் உள்ள புலமாகும். இது கிராமக் கணக்கில் பீ.பீ.குளம் கண்மாய் எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இப்புலம் பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள கண்மாய்ப் புறம்புகல் ஆகும்.